கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024

**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

தமிழ் **II**
**Tamil II**

**72 T II**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**சுட்டெண் :..........................**

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத் தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

**பகுதி I**

**1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் மூக்கொலிகள் மட்டும் உள்ள தொகுதி
(1) க், ச், ட், த் (2) ங், ஞ், ந், ண் (3) ட், ங், ண், ன்
(4) ப், ம், ந், ண் (5) ய், ர், ழ், ள் (......)

1.2 பின்வருவனவற்றுள் உடம்படுமெய்யாக வரக்கூடிய எழுத்து
(1) க் (2) ஞ் (3) ப் (4) ம் (5) வ் (......)

1.3 உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் வரக்கூடிய எழுத்துக்களின் எண்ணிக்கை
(1) 2 (2) 4 (3) 10 (4) 12 (5) 18 (......)

1.4 பின்வருவனவற்றுள் பெயர்ப்பகாப்பதமாக அமைவது
(1) வாழ்க (2) மற்று (3) அரசி (4) நிலம் (5) வந்த (......)

1.5 பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்து காலம் காட்டும் சொல்
(1) உண்டான் (2) புக்கான் (3) கண்டான்
(4) செத்தான் (5) தேடினான் (......)

1.6 பின்வருவனவற்றுள் அம் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்
(1) புத்தளத்தான் (2) சிலவற்றை (3) புளியங்காய்
(4) சிலம்பம் (5) மரத்தை (......)

1.7 பின்வருவனவற்றுள் வினைத்தொகையாக அமையும் சொல்
(1) பாதமலர் (2) விரிகதிர் (3) முகமதி
(4) இராப்பகல் (5) கண்ணீர் (......)

1.8 பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது
(1) பல்கலைக்கழகம் (2) கட்டுரை (3) சகோதரத்துவம்
(4) நாற்காலி (5) வட்டமேசை (......)

1.9 பின்வருவனவற்றுள் தெரிநிலை வினையாக அமைவது
(1) வனைந்தான் (2) ஓடுதல் (3) பொரியல்
(4) நடந்தவன் (5) போதல் (......)

1.10 போ எனும் வினையை துணைவினையாகக் கொண்ட தொகுதி
(1) வரப்போகிறார், எங்கே போகிறார் (2) மாமா போகிறார், காலம் போகிறது
(3) சந்தைக்குப் போனேன், பயந்து போனேன் (4) அமைதி போய்விட்டது, போய்விடுவேனா
(5) விழப்போகிறது, புறப்படப்போகிறார் (......)

1.11 செயப்படுபொருள் குன்றிய வினையாக **அமையாதது**
(1) கரைந்தான் (2) எரித்தான் (3) எரிந்தான்
(4) நனைந்தான் (5) ஒடிந்தான் (......)

1.12 "எனக்குத் தலையிடிக்கிறது" இங்கு கு உருபு உணர்த்தும் பொருள்
(1) முதற்காரணம் (2) நிமித்தகாரணம் (3) தகுதிப்பொருள்
(4) அனுபவப்பேறு (5) உடனிகழ்ச்சி (......)

1.13 இயல்புப்புணர்ச்சி இடம்பெற்ற சொற்றொடர் எது?
(1) காலடி (2) காற்சிலம்பு (3) காட்டாறு
(4) தேங்காய் (5) காலாற்படை (......)

1.14 குற்றியலுகரம் கெட்டுப் **புணராத** சொல்
(1) அங்கங்கு (2) எட்டடி (3) காசோலை
(4) பட்டுச்சேலை (5) கதவடைப்பு (......)

1.15 பின்வருவனவற்றுள் விருப்பு ஏவலாக அமைவது
(1) நில்லுங்களேன் (2) நடவுங்கள் (3) வராதீர்கள்
(4) ஓடாதே (5) செய் (......)

1.16 பாரதி நிலவைப் பாடினான் என்பது
(1) கூட்டுவாக்கியம் (2) தனிவாக்கியம் (3) கலப்புவாக்கியம்
(4) கூட்டுக்கலப்பு வாக்கியம் (5) துணைவாக்கியம் (......)

1.17 அழகான புள்ளிமானே... என்பதிலுள்ள அழகான என்பது
(1) தனிப்பெயரடை (2) ஆக்கப்பெயரடை (3) தனிவினையடை
(4) கூட்டுவினையடை (5) அடுக்குப்பெயரடை (......)

1.18 இடாப்பு என்பது எவ்வகை மொழிச்சொல்
(1) கிரேக்கம் (2) அரபு (3) உருது
(4) தெலுங்கு (5) மலையாளம் (......)

1.19 நான் ஒரு சிறந்த கவிஞன்
(1) அல்லன் (2) அல்ல (3) அல்லை
(4) இல்லை (5) அல்லர் (......)

1.20 அகர வரிசைப்படி **அமைந்திராத** சொற்தொகுதி
(1) பஞ்சம், மேதை, யவனர், யுகம், வண்டு
(2) அரியாசனம், எருக்கலை, சப்பாத்திமுள், தருமர், வைகறை
(3) இறைவன், சங்கமம், தேவதை, நாரிகம், யாசகம்
(4) ஞமலி, சிந்தனை, சீர்திருத்தம், புயற்காற்று, மோகம்
(5) சிறைச்சாலை, சினம், நீராடுதுறை, மேன்மை, விழுதுகள் (......)

2. (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

ஆழ்ந்த நேரடி அனுபவமின்றி அவசரப் போக்கில் போதிய பரிச்சயமற்ற விடயங்களைப் பலர் நாவலுக்குப் பொருளாகக் கொள்கின்றனர். அவர்கள் பிரச்சினைகளைச் சரியான சமூக பொருளாதார பகைப்புலத்தில் நோக்குதல், துன்பம் சித்திரிக்கப்புகும் வாழ்வில் ஆழ்ந்த அனுபவ ஈடுபாடு கொண்டு உள்ளத்தில் உண்மை ஒளி பெற்றாலன்றி எழுத்தில் ஒளி பிறக்க வழியில்லை. அறியா ஒன்றை நேசிப்பதென்பது ஆகாத காரியம். சிலர் தமக்கு தெரிந்த வரலாற்றையோ அரசியலையோ சமூகவியலையோ மொழியியலையோ வைத்துக் கொண்டு ''தோள் கண்டார் தோளே கண்டார்'' போல எழுதுகின்றனர். ஒரு கிராமத்துக்கோ தொழில் நிலையத்துக்கோ போய்வருவதால் மட்டும் அங்குள்ள ஒருவனின் அனுபவத்தைப் பெறமுடியாது. சித்திரிக்கப்புகுந்த குறிப்பிட்ட வாழ்வு சம்பந்தமான புறவிபரங்களைச் சேகரித்து அவற்றை ஆங்காங்கு தூவி விடுவதால் ஒரு நாவல் சிறப்படையாது. அடித்தளமாக அமைந்திருக்கும் மானிட உணர்வுகளினதும் வாழ்வோட்டங்களினதும் தன்மைகளையும் விண்டுகாட்ட வேண்டும். அதற்குப் பொறுமையான, கூர்மையான அவதானமும் சிந்தனையும் அத்தியாவசியமுமாகும். உடனடியாக மனதைத் தொட்டவைகளையும் மனதிற் பட்டவைகளையும் வைத்துக்கொண்டு நல்ல நாவல் படைத்தல் ஏலாது.

விமரிசகர்களும் கதாபாத்திரங்களின் உறவுகளும் இயக்கமும் சித்திரிக்கப்படுமாற்றை நோக்காது மொழியாட்சி, ஊர்முக நகர்முக வர்ணனைகள், தொழில் விபரங்கள், சில அரசியல் நம்பிக்கைகள் போன்றன தவறின்றிப் பொருந்தியுள்ளனவா என்பதை மட்டும் கண்டறிவதில் தலையைப் பிய்த்துக் கொள்வதைக் குறைத்தல் நன்று. பாத்திரங்களைத் தம் நிலைமாறாத் தன்மையினவாக படைக்கும் இயல்பும் பரக்கக் காணப்படுகிறது. பல நாவல்களின் கதை ஒருமைப்பாடு கதைக்கருவினடியாகவன்றி அத்தகைய தலைமைப் பாத்திர இயக்கத்தால் அமைவதாகவே தோன்றுகிறது. தனிநபர் நடவடிக்கைகளுக்குத் தரப்படுமளவு முக்கியத்துவம் கதை வளர்ச்சிக்கோ தர்க்க ரீதியான சம்பவ ஒழுங்குக்கோ தரப்படுவதில்லை.

சிலர் உருவத்திலும், சிலர் உள்ளடக்கத்திலும் அதிக கவனம் செலுத்துவர். ஆனால் உருவமும் உள்ளடக்கமும் இணைந்த ஒருமைப்பாடே உன்னதமான ஆக்கங்களைத் தோற்றுவிக்கும்.

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை படித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மகளிர் ஈடுபடும் பல விளையாட்டுக்களை சங்கநூல்கள் கூறும். கடற்கரையில் இளமகளிர் சிற்றில் இழைத்து விளையாடும் வண்டல் அவற்றுள் ஒன்றாகும். வண்டல் விளையாடும் இளமகளிரைப் பற்றி பொருநராற்றுப்படையும், வண்டல் இழைக்கும் ஆயத்தைப் பற்றி பெரும்பாணாற்றுப்படையும் நோக்கும். வரிப்பட்ட மணலில் வண்டற்பாவை செய்து மகளிர் விளையாடுவரென அகநானூறு பகரும். பலரும் வந்து நீராடும் பெருந்துறைக் கண் மலரோடு பெருகி வந்த தண்ணிய நீர் வண்டல் மனையைச் சிதைக்கும். செல்வம் சிறந்த மகளிர் பந்து விளையாடுவர். ஒளிமிக்க பொற்சிலம்பு ஒலிப்ப, வான்தோய் மாடத்தில் வரிப்பந்தாடுவர் இவர். கதிர்கொய்த அரிதாளிண்கண் இருந்த குருவிகள் எழுவது விழுவதுவாய் துன்பமுறச் சிறைவிரித்தாடுதல் மகளிர் பந்தாடுதலை ஒக்கும். பெண்கள் பந்தை விரும்பி ஆடுவர் என அகநானூறும் கூறும்.

மணல் பரந்த முன்றில்களில் ஆடப்படும் கழங்கு மகளிரின் இன்னொரு விளையாட்டாகும். இவ்விளையாட்டிற் பெண்கள் சிறிய உருண்டையான கற்களை மேலே எறிந்து புறங்கைகளில் ஏந்துவர். கழங்கு, பயறு உழுந்து போன்ற ஒருவகைச் செடியாகும். அதன் விதை இவ்விளையாட்டிற் பயன்படும். இப்பொழுது இவ்விளையாட்டு ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிற் கொக்கான் என வழங்கும். இக்காலத்தில் சிறுமிகளும் முதுமகளிரும் இதனை விரும்பி விளையாடுவர். அவர் பெரும்பாலும் ஏழு கற்களைக் கொண்டே ஆடுவர். இவ்வாட்டத்தைக் கொக்கான் வெட்டுதல் என்பர். முத்தை யொத்த வார்ந்த மணலிலே மெத்தென மெத்தெனக் கையிற் புனைந்த குறுந்தொடியசையப் பொன்னாற் செய்த கழங்கினைக் கொண்டு மகளிர் விளையாடுவர் எனப் பெரும்பாணாற்றுப்படை கூறும். செறிந்த உள்ளிடு பருக்கையையுடைய சிலம்பினையும் குறிய வளையினையுமுடைய மகளிர் வேதிகை போல உயர்ந்த எக்கர்க்கண்ணே இருந்து பொன்னாற் செய்யப்பட்ட கழங்கினால் விளையாடுவர் என்பது புறநானூறு.

1) சங்க நூல்கள் குறிப்பிடும் மகளிர் விளையாட்டுக்கள் எவை?
2) இவ்விளையாட்டுக்கள் பற்றிக் குறிப்பிடும் இலக்கியங்கள் எவை?
3) பந்து விளையாட்டுப் பற்றிக் குறிப்பிடப்படும் செய்தி யாது?
4) இவ்வுரைப் பகுதியில் உள்ள உவமைத்தொடரை எடுத்துக்காட்டுக
5) கழங்கு பற்றி புறநானூறு குறிப்பிடும் செய்தி யாது?
6) ஈழத்தில் கழங்கு விளையாட்டு பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்கள் எவை?

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
   (அ) இளைய தலைமுறையும் இணையமும்
   (ஆ) இலக்கியம் காட்டும் விழுமியங்கள்
   (இ) க.கைலாசபதியின் தமிழியற்பணிகள்
   (ஈ) இலங்கைப் பொருளாதார வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பு
   (உ) கற்றாங்கு ஒழுகுக

## பகுதி II

4. (அ) பல்லவர்கால பக்திசாரா இலக்கியங்களை வகைப்படுத்துக.
   (ஆ) சங்ககால அகத்திணை மரபானது பல்லவர்கால பக்தி இலக்கியங்களில் பிரதிபலிக்குமாற்றை விளக்குக.
   (இ) பல்லவர்கால பக்தி இயக்கத்தை வளர்ப்பதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட வழிமுறைகள் பற்றிக் கருத்துரைக்குக.

5. (அ) ஐரோப்பியர்கால தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக.
   (ஆ) தமிழ் உரைநடை இலக்கியத்தின் பிரதான பண்புகளை விபரிக்குக.
   (இ) வீரமாமுனிவரின் தமிழ் இலக்கியப் பணிகளை மதிப்பிடுக.

6. (அ) பள்ளு இலக்கியத்தின் அமைப்பினை விளக்கி, ஈழத்தில் தோன்றிய பள்ளு இலக்கியங்களைக் குறிப்பிடுக
   (ஆ) போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கிறிஸ்தவ இலக்கியங்களின் பங்களிப்பு பற்றி கருத்துரை வழங்குக.
   (இ) ஒல்லாந்தர் காலத்தில் சைவசமயம் சார்ந்த இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றியமைக்கான காரணிகளை விளக்குக.

7. பின்வருவோரில் யாரேனும் இருவர் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
   (அ) பாவலர் துரையப்பாப்பிள்ளை
   (ஆ) ம.மு.உவைஸ்
   (இ) மஹாகவி து.உருத்திரமூர்த்தி
   (ஈ) டொமினிக் ஜீவா

8. (அ) (I) பின்வரும் வாக்கியத்திலுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக.
   ''அழிக்கப்பட்ட தென்னாசியாவின் இரண்டாவது பெரிய அரிசி ஆலை மீண்டும் இயங்குமா?''

   (II) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் திருத்தி எழுதுக
   ''வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்வதற்கு உடல் ஆரோக்கியமும் மன அமைதியும் இன்றியமையாதது.''

   (III) ''கண்ணன் நாளை வருவான் என்று தம்பி சொன்னான்.'' இவ்வாக்கியத்தில் உள்ள சார்புநிலைத் தொடரைக் குறிப்பிடுக.

   (IV) குருவி + கூடு, ஆடு + குட்டி என்பன இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

   (V) ''வாழ்'' என்ற வினையடியாகப் பிறக்கும் ஆக்கப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் என்பவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிச் சிறுகுறிப்பு வரைக
   (I) குற்றியலுகரப் புணர்ச்சி
   (II) அளபெடை
   (III) முதல்வினை